உ சிவமயம்.

9 FEB 1931



140
1931/T

# வெள்ளிமலையாண்டி நவரசக் கீர்த்தனை

மேலூர்த் தாலுகா புதூலைமா நகரமென்னும் பொட்டப்
பட்டிக் கிராமம்

சின்னாண்டி சுவாமியவர்களின் பக்தன்

## அ. ம. அய்யாச்சாமி செட்டியார்

அவர்கள் இயற்றியதை

ஷை யூர் ௵ முத்துப்பழனி செட்டியா ரவர்களால்

மதுரை புதும[illegible]ம் புஸ்தகஷாப்,

## இ. ராம குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது,

[illegible]துமாசி வீதி, குருசாமிக் கோனார் தெரு

[illegible]சந்திரவிலாசம் பிரஸில்,

[illegible]பதிப்பித்தது.

1931. 0—2—0

926:38.2195m
N31
170646

உ

சிவமயம்

வெள்ளிமலை யாண்டி

# நவரசக்கீர்த்தனை.

வெண்பா.

சீர்பெருகும் பார்புதுவை சேவற்கொடி யோன்மேல்
பார்புகழ வோர்கீதம் பாடவே—நேர்வருகும்
தந்திமுக மாயுருவ தாரினென வேயுலவும்
தொந்திவயற் றோனே துதி.

9 FEB 19

ஆசிரிய விருத்தம்.

புவனமதி லோர்அரிய பட்டியென உற்றநற்
புதுவைநகர் மேலதாக
பூலோக கைலாய வெள்ளியங் கிரிதனில்
போய்ப் பணிவோர் களுக்கு
கவணமுட னருள்புரி கின்ற கோலாகலன்
கந்தனென வந்து புவியில்
காவடிக் காசைகொள் வீரப்பிர தாபனே
காத லாலே யிரண்டு
எவணமுள பெண்களிரு பக்கமாய் மயின்மீது
யேறியென் முன்பு வருவாய்
என்றுநான் சின்னாண்டி சுவாமியின் முன்பாக
யிரைஞ்சடி வணங்கி நிற்கும்
தவணமுள யென்மீது மனமுவந் தாளுவாய்
சரஹண னென்று மறவாத்
தாச னய்யாச்சாமி நேசனே யீசனே
சாமியே குமரேசனே

விருத்தம்.

வேலையவர் கைப்பிடித்து உலகையாள
வெள்ளிமலை மீதிருக்கும் சாமிநாதன்
தானையொரு நாளுமற வாதஅய்யாச்
சாமிதமிழா லொருகீர்த் தனமாய்ப்பாடும்
நூலையவர் வாசித்து அன்பாய்ப் பாடி
னோர்க்குமது தெரிசனந்தந் துரவுகாட்டக்
காலையிலும் மாலையிலும் துதித்துநாளும்
கந்தன்பதம் முற்றவரைக் கருதுவோமே.

## கலித்துறை.

மனக்கே யிருப்பிடம் வெண்டாமறைப்பூ தனிலிருந்து
பிணக்கே யிலாமல் என்தமிழ்க்குதவி பிழைதிருத்தி
கணக்கே யெழுதிப் யேடும்மணிவடம் கைப்பிடித்த
உனக்கே வணக்கம் செய்குவே னுன்மறை யுரைப்பவளே

## திருப்புகழ் சந்தம்.

ஏழைபர தேசிகளுக் கீயுமுக மொன்று
யெப்பிணியுந் தீரமருந் துதவுமுக மொன்று
நூலையுணர்ந் தேத்துவரை நோக்குமுக மொன்று
நீந்து பதம் வந்தவரைக் கார்க்குமுக மொன்று
ஊழையறுத் திம்மைசுகம் உதவுமுக மொன்று
உலகையொரு நொடியில்வலம் வந்தமுக மொன்று
மாலையணி ஆறுமுக மானபொருள் வெள்ளி
மலையிலமர் குமரகுரு வானபெருமாளே.

(பல்லவி.) நடருஜா என்ற வர்ண மேட்டு

கண பதி வெள்ளிமலைக் கணபதி அந்தக்
கால நாளுமணு காது வரமருள்வாய் [கண]

அநுபல்லவி.

வனம தணிபவளின் மருகனே யருட்கண்
வா திலாதுயிங்கு
வா வுனையே நம்பி
வா ழுலகமொரு
வா ரகமதென
வய றுரு மறைதிரை சுயபர பிர்மமென
வருமுத லொருசிவ மகவெனு மிகுண [கண]

சரணங்கள். 1861

தே வரினிடுக்கத்
தே தீர்த்திட வந்த 784.0954
தே வீரையுஞ்சந்
தே கம்தோண வாய்வாய்
சிரம்பரி யலிவன மதிலுமை யிடங்கொய்த
திதிமக னுயிர்தனைச் சதிசெய்த துதியுள [கண]
கா தலுடனெனைக்
கா ப்பதுவு மெனக்
கா ருணைப்போற்ஜீவ
கா ருணிய தெய்வம்
கவலையென் பவையொரு திவலையணுகா வண்ணம்
கயமுகா வரம்கொடு அயனரி யாதிபோற்றும் [கண]

தா கமுளவரம்
தா வுனதுபதம்
தா யெனக்குறுதி
தா வெனக்கோறிடும்
சந்ததம் புதுவைஅய்யாச் சாமிதமிழ்க்கே யுதவி
தந்திடவும் வந்தயீசன் மைந்தனுய் வந்தமயூர [கண

## இராகம் - பியாகு தாளம் - ஏகம்.

பல்லவி.

வந்து கார்த்திடுவாய் மாமயில் மீதேறி [வந்து]

அநுபல்லவி.

சந்தத மிருந்திடும் கந்தாகுகா யிவ்விடம் [வந்து]

சரணம்.

ஆதியில் கபிலரை ஆதரித்த சண்முகா
அடங்காது வெறிகொண்ட பன்றியைக் கொன்றவா
நீதியிலா தரக்கர் நிலையிலாது செய்தவா
நித்திய மாகவெள்ளி மலையிலமர்முருகா [வந்து]
நல்லியக் கோடனுக்கு நான்காம்சா மத்தில்வந்து
நான்துணை செய்வேனென்று கனவினிற் சொன்னபடி
துள்ளிய மூவேந்தர்கள் துரகப் தாதிகொன்றீர்
துற்புத்தி மந்திரிதலை கிள்ளிய சஸ்திரமூர்த்தி [வந்து]
சிவநெற்றிக் கண்ணினுற்ற தீப்பொரி யாருமாகச்
சேர்ந்துமே ஆறுமுக மான சரஹணனே
பவந்தொலை யத்துதிக்கும் பாலனய் யாச்சாமியும்
பணிந்துநிதங் கும்பிடும் பச்சைமயில் வாகனு [வந்து]

பல்லவி. தேசிக ராகம் தாளம் ஆதி

வெள்ளிமலை வேலவா—புதுவைநகர் [வெள்ளி]

அநுபல்லவி.

புள்ளிமயில்மீது புவனமொருநொடியில்
சொல்லியபடிக்குவரச் சொன்னதந்தையிடம்வந்த [வெள்ளி]

சரணம்.

திருப்பதியி லிருந்து கிருஷ்டித் தொழிலும்செய்தாய்
தேகியென்று வந்தவருக் காகப்பிச்சை யிடச்சொன்னாய்
தருப்பை தரித்தராம் மூர்த்தியெனப் பேருங்கொண்டாய்
தஞ்சமென்று; வந்தவருக் கஞ்சலெனச் சொலுமிந்த [வெள்ளி]
நாரதர் செய்தயாகம் நலம்கெட்டுப் போனவுடன்
நாவசைத்துக் கொர்ச்சனையாய் உண்டாகிய ஆட்டுக்கிடாய்
பாரதம் செய்ததைக்கண்டு பயந்தோரைக் கார்க்கவீர
பாருவினுல் கொண்டுவந்து ஆரோகணம் செய்திருக்கும்[வெள்ளி]

சற்றுமறவா தய்யாச் சாமிதமிழ்க் கேயிரங்கி
சகலபிணி பவங்கள் அகலச் செய்குவாயென்று
கற்றுவந்து சொன்னகவிக் காகச் செவிகொடுத்து
காதலுட னுதராவாய்ப் பாதகமகலச் செய்யும் [வெள்ளி]

பல்லவி வே லவனையுனை என்ற வர்ணமெட்டு

மா மயில்வனை நான்துதிப் பேனே—பச்சை
மா மயிலவனை நான்துதிப் பேனே வெள்ளி [மா]
மலைதனி லமர் பன்னீர்
குளையுள முருகனே
பிழைதனைப் பொருத்தெனை
நிலைபெறச் செய்யும் பச்சை [மா]

சகலமும் செய் யெங்கள் கந்தன்
நிகள மும்யே திங்கு வந்தென்
கவலை யறச்செய் வாமுந்தந்துன்
புவன முழுதும் நொடியில் வந்த
பூதல மசுரர்கள் குலம் அறத்தானே
காதலாய் வில்வேலைத் தானெடுபோனே
பாதளம் துளைத்தபன் றியைத்தடுத்தோனே
மாதவங்கோனம்மை வரம்கொடுத்தோனே
மங்கை பாகன்சேய் எங்குமே துதி
செங்கைவேலுள தங்கமேகதி
மகதின மதில்குரு வெனமுன முமதந்தை
அகமது தெளிவுர மொழிபிர ணவமதை
புகவெனச் சொலியுள கலியுக வரதனுப்
ஜகமதில் புகழ்பெரு குகனறு முகவனே
சண்முகா நீ யென்முன் வருவாய்
பண்முறைநா னெண்ணிப்போற்றி [மா]

உந்தன்முகங்கண் டின்ப முறவே
தந்தென் னகமும் அன்பும் பெறவே
வந்தென் பிணிகள் முழுதும் அறவே
எந்தன் தொண்டுக் கருளும் பெரவே
போற்றித் துதிக்குமெனக் கேகொடு காட்சி
நாற்றிசை சுற்றிவந் தகிலென்ன தாட்சி
காற்று நெருப்புமுனைக் கவர்ந்திடப் பேட்சி
ஆற்றில் விடுகவென ஆனதும் மாட்சி
அந்த வேலைபால் தந்தருவர் பேர்
எந்தநாளும் சொல் வந்தமைந்தனே

எதிர்படு மசுரரின் முடிசித ரிடமயில்
அதிரொலி யிடுவிடு மவர்பொடி படபட
விதிமுடி செயமன அதிதிட விகசித
ததியுன திருவடி கதிபெற உயர்புது
வையில் வாழும் அய்யாச்சாமி
கையால் தொழுகு மெய்யா குமர [மா]

பல்லவி. இராகம் முகாரி தாளம் ஆதி.

ஆண்டி மலை யாண்டி——எனை
ஆதரித் திகபர ஜாதக மருள்புரி [ஆ.தி]

அநுபல்லவி

வேண்டியவர்க் குனைப்போ லுபகாரியாரு
வேதமுதலாய் நின்ற அரகராபாரு [ஆ]

சரணங்கள்.

வளையல்தனைச் சுமந்து கூரியும் விற்றாய்
வள்ளிதனக் காகவே மரமாக வுற்றாய்
தலையை அசைத்துக் கொண்டு கிழவனாய் வந்தாய்
தான்தின்ன மாவினால் விக்கலும் கொண்டாய் [ஆ]

பன்னிரு கரமுடன் என்முன்னே வரவே
பாலநான் கேட்பது நல்வரம் தரவே
உன்னிரு பதந்தொழு வதுவுமே பெறவே
உனது தெரிசனம்தா வெனதின்ப முரவே [ஆ]

புதுவை நகரமய்யாச் சாமிசொல் கேட்டு
பூவுலகினிலுந்தன் திருவிளை யாட்டு
குதுகுல முடனிங்கு செய்துமே காட்டு
கூவியே நான்சொல்லுவது மொருபாட்டு [ஆ]

## திருப்புகழ்ச் சந்தம்.

இடவல மெனகர கரவென நடமிடு
திடமுட னலமென மொடுவிரை யொடுமயில்—தனிலேறி
தினமுனை நினைவுற அகமது சுகமுற
மனதினி லருள்புரி எனநிதம் தொழவரம்—தருவோனே
தவமது செயவசு ரரர்பெரு வரமது
எவர்களும் நிகரிலா ததுவேனு மவர்களை—மயிலோனும்
கரசிர மதுவறுத் திடவிட நொடிதனில்
பரபரப் பொடுமுடி சிதரிட ஒருகணை—விடுவோனே
புவிதனி லுயர்வுள பதிபுதுவை நகரில்
கவிசொலு மய்யாச் சாமிதமிழ்குத விடும்வெள்ளி - மலையோனே

பல்லவி. இராகம் தேசிக தாளம் ஆதி.

பச்சைமயில் வாகனா———வெள்ளியங்கிரி [ப]

அநுபல்லவி.

இச்சையுள தளிக்கும் யின்பசுகங் கொடுக்கும் [ப]

சரணங்கள்.

ஆண்டியென்று நம்பும்சின் னாண்டி சுவாமியார் தன்னை
வேண்டியவர்கள் மூலம் விண்ணப்பம் செய்வோம் நாங்கள் [ப]

சங்குசே கண்டிச்சத்தம் தானேகேட் டின்பமொடு
இங்குவந் தெங்கள்வினை யாவும் அகலச் செய்வாய் [ப]

மலையடி வர்ரத்தின் கீழ் மடமெனு மவ்விடத்தில்
இலகுலுங் காதநேரம் எழுந்தருளி வந்திடும் [ப]

அய்யாச் சாமிபணியும் ஆண்டவா யென்றயிரு
கய்யாற் தொழுது நமஸ்க் காரம் செய்குரோம் நாங்கள் [ப]

## திருப்புகழ் சந்தம்.

மூதுரை யோதுமெந் தனையாளா வென
மொழிகிறே னுகையா லும் சீலா ஒரு
மோசிவாயாபன் னிருதோளா — சண்முகவேலா

காமுகன் மருகனே குமரேசா அழ
கான தெய்வானை வள்ளீசு ரேசா ஒரு
காலமும் மறவாத முருகேசா குக—கதிரேசா

வானொடு பூவுலகோர் கோனே உனை
வழிபடு கிரசிறுவனும் நர்னே யிங்கு
வரவனு தினம்துதி செய்வேனே மா—மயிலோனே

சங்கரன் மகிழ்ந்துபெற்ற குமாரா உயர்
சரஹண பவகுரு எனும் வீரா அய்யாச்
சாமிசொற்ற மிழுக்குப காரா அதி—சயதீரா

## திருப்புகழ் சந்தம்.

சீர்பெரக்குமுரி பளீர் பளீரென
கார்சுரக்குமலை தளீர் தளீருடன்
சேரவெள்ளியங் கிறீ கிறீயினில்—வளர்வோனே

பாடிவந்தற கரா கராவென
நாடிவரும்ஜனம் சகா சகாகோடி
கூடிவணங்கிட யிதோ யிதோவென—வருவோனே

தார்மிகும்கடம்ப வனம் வனந்தனில்
பேர்பெருகும்கீழ் மடம் மடமதில்
நேர் வரமருளும் குகா குகாவெனு—மயிலோனே

சிந்து பதத்திறைசை கொள்வாய் கொள்வா யென்று
வந்துபடிக்க வரம் சொல்வாய் சொல்வாய் ஜயம்
தந்து கொடிபிடித்த செவ்வேல் செவ்வேலெனு—முருகோனே

மாதவனே சம்போ சிவா சிவாவென
ஆதரவு செய்ய அவா அவாவுடன்
நீதமே சரவண பவா பவாஅருள்—தருவோனே

சித்துவளங்கிடுசின் ஞண்டி ஆண்டியென
கத்துமெங்கட்குவரம் கொடு கொடு வென
நத்தும் புதுவை ஐயாச் சாமி சாமியெனத்—தொழுவோனே

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஒருபொழுது முனேமறவா நான்பிணியி னுல்வாடி
உள்ளம் நொந்து
கருகுவது மயன்செயலோ அல்லவெனி லுன்செயலோ
கண்டிலேனே
நறுமலர்க ளணிமார்பா உனேஞான பண்டிதனுய்
நான் தெரிந்து
வருபவனே யெனதுபழ வினைத்துயரை அகற்றிடவே
வருகுவாயே

காவடிச்சிந்து போன்னுலவு என்ற மேட்டு.

சீருலவு தீரனெப் பாரதம்வே தவியாசர்
சிந்தையினி லேந்தாம்வேத மாகவே——சொல்ல
எந்தவுல கோர்க்கும்தெளி வாகவே——மனந்
தேரியேதந்த மேயொடித்தெழு தோனுக்கேயினே யோனுக்கிதமுள
தேவிவள்ளி தெய்வயானே யாகவே——நாளும்
தாவியின்ப மோடுறவுண் டாகவே

தங்கமுழு தங்கமென கங்கைமக ளெங்கள்குல
சாமியென நாமவரை தேடியே—வந்து
காவடிச்சிந்தையே சொல்லிப் பாடியே—உந்தன்
தந்தைதாயுனே யெந்தவேளையும் கந்தனேயெனச் சிந்தையேகொண்ட
தண்ணலே யென்முன்னேவர நாடியே—குரு
வென்னவே சந்தோஷமும் கொண்டாடியே

வெள்ளிமலேயில் யிருந்து புள்ளிமயில் மீதுவந்து
வெண்ணீரள்ளி யென்னிடம்தா வென்றேனே—இப்போ
உன்னிருதாள் கதியென்று நின்றேனே—வடி
வேலனேயரன் பாலனேயனு கூலனே குண சீலனே மர
வேனுனேயென் றேனேபரங் குன்றேனே—நினேத்
தேனுனே யென்னுளும் பணிகின்றேனே

சந்தத மிருந்திடவ மைந்த பொட்டப் பட்டியெனத்
தாரணியில் காரணப்பேர் ஆனதே—ஆதிப்
பேரெனப் புதுவைநகர் தானதே—ஐயாச்
சாமிசெந்தமிழ்க் கேமிகத்துணை யாயிருந்திடவே நிதம்தொழும்
தன்மைதெரிந் தருளுமுண் டானதே—அதி
வண்மையொடு செய்தபாவம் போனதே

அம்பாள் மதுரை மீனாட்சி என்ற மெட்டு.

வடிவேலாயுதனைப் பத மேற்றி
சொலு-மிடரகலப் போற்றி
மறக்கா-விதமே நாமம் சாற்றி
வினைவிலகத் தூற்றி வினைவிலகத் தூற்றி வினைவிலகத்தூற்றி []

அரன்-பாலா யுனையேதொழ நாடி
நான்- பலது கீதம் பாடி
சிறப்பாய்ப் பணிவேயாவர் கூடி
பஜனை தனைப் பாடி பஜனை தனைப்பாடி பஜனை தனைப்பாடி [வே]

கண-நாதா உன்மீது சொல்லும் பாட்டு
முன் னன்கு செவியில் போட்டு
உந்தன்-அருளையெனக்குக் காட்டு
நவிலுவதைக் கேட்டு நவிலுவதைக் கேட்டு நவிலுவதைக்கேட்டு

சிவ-சம்போ சதாவாய் நினைப் பேனே
ஐயாச்-சாமி தொழுகும் கோனே
எனக்கா தரவுகூறு வோனே [னே
தனையும்துதித்தேனே தனையும் துதித்தேனே தனையும்துதித்தே

காவடிச் சிந்து பாலைவாய் என்ற மெட்டு:

சக்கரை தேனிற்பழுத்த அக்கனியோ டாவின்பால்நெய்
முக்கியமாய் இக்கணமுண்-டாகவே—தேடி
வக்கனையா யக்குகனுக் - காகவே

திக்குமுழு துக்குமொரு பக்கவல மக்கணத்தில்
அக்கனிபெரத் தடைபட் - டேகியே—மேற்கே
நிற்குமுரு கக்குமர-- தேகியே

முக்கணனு னக்கனையும் பக்குவப்ப ழனியப்பா
இக்கனித னக்குநிக - ராகுமோ—உயர்
அக்கனியு னக்குப்பெயர் - போகுமோ

இக்குவலை யத்தினிலே கட்குறவ ரப்பெண்மோகம்
நிற்குவது னக்கழகும் - தானய்யாச்—சாமி
சொற்குதவு தக்கதென்பே—னய்யா

பல்லவி மத்யாவதி தாளம் ஏகம்

வெள்ளிமலை வேலா பாவ
வினைபொடி படச்செய்யு முனைநிதம் தொழுகுவேன்

அநுபல்லவி.

மெல்லியாள் ரெண்டொடு விளங்கு மீஸ்பரா
வித்தகனே நித்தமுனை
பக்தியொடு நத்தினேனே [வெ]

சரணங்கள்.

புள்ளிமா னீன்றதோர் வள்ளியைச் சேர்ந்தவா
பூமிதனைச் சுற்றி கொடியில் வந்தவா
அள்ளிக் கொடுப்பதற் காகப்பன்னீர் கையா
ஆறுமுகா கோறும்வரம்
தாருமெனப் பார்புகழும் [வெ]

கந்தனெனப் பெயர் கொண்டமுருகனே
காதலாலேவேங்கை மரமாய் நின்றோனே
உந்தனைப் போலவே யெந்தனுக்கார் துணை
ஓர்மையோடு தீர்பிணியை
பாரினில்நீ பேர்பெறவே (வெ)

சின்னாண்டி சுவாமிகள் உன்னாலே யாமென்ற
சேதிதனைக் கேட்டு நீதி செலுத்துவீர்
பொன்னாய் விளையும்நல் மன்னும் புதுவைதாம்
பூமியிது வாமிதில் நீ
சாமி ஐயாச் சாமிதொழும் (வெ)

பல்லவி கருணைதந்தருள் ராகவா என்ற மெட்டு.

தருணம்வந் தெனையாளுவாய் கதிர்வடிவேல்

அநுபல்லவி.

முருகனெனப் பெயர் ஒருதரம் சொல்லப்
பெருங் கருணையொடு வரம்தரப் பதம்
பெருத லடையயீரா று கையனே - அருளய்யனே [த]

சரணங்கள்.

வருமரக்கனை மாளவே கொன்றாய் - உன்னிடம் தேடி
வந்தவரைக் காக்கவே நின்றாய் - வெள்ளியங்கிரி

வளருமுனதிருப் பிடமுயிருமுனு
படைதனிலுனக் கிடமமைத்ததில்
இளமை வயதுள்ள மெய்யனே - எனதய்யனே [த]

சீக்கின் துயராலே யருண்டு மலையிலேறி
சிகரமிருந்தேயே யுருண்டு உயிர்துறக்கும்
தீரனருணகிரி யாரைப்பிழைத்திடவும்
நீரில் விழுந்திறக்க கோரினவர்கள் செந்தி
லாரைக் கார்த்த முருகா மாலின் மருகா [த]

பதியிலுயர் புதுவைதா னய்யாச் சாமிதமிழை
பத்தியொடு நித்தமே மெய்யா நம்பிப்பணியும்
பாலனேவடி வேலனேயனு
கூலமேசெய ஞாலமே புகழ்
பரமகுருவானவுள் ளாசா மீசானய்வாசா [த]

பல்லவி என்தேவியாளை விற்குறேன் என்ற மெட்டு

கந்தா வுனையே துதிப்பேன் இந்தவேளையில்
வந்தாட் கொளவே வேண்டினேன்

அநுபல்லவி.

தந்தா ளுன தருளைச்
சிந்தா தெனக்குக்கொடு
விந்தா அலர்ந்திருந்த
செந்தா மறைக்கய்யனே [க]

சரணங்கள்.

சீலா சதங்கைமணிக்
காலா மலைமடந்தை
பாலா மதனுகமக்
கோலா கலமுடைய
வாளா யுதந்தாங்கிய
தோளா உடையவேலா [க]

ஈசா உனையழைக்கப்
பேசா திருப்பதுவும்
லேசா நினையாதேயுள்

ளாசா அரக்கர்குல
காசா தொண்டர்க்குவிசு
வாசா யெனக்குநேசா

நாதா தெரிசனம்பெறத்
பாதா ரவிந்தம்கொடு
நீதா வெனக்கெஞ்சினேன்
வேதா கமத்துரைகு
போதா பிணிதீர்க்கவொண்
ஞாதா கருணைதாதா [௯]

ஓய்யா ரமுள்ள ஆறு
மெய்யா யிருக்கும் பள்னீர்
கையா ளள்ளிக் கொடுக்க
அய்யாச் சாமிதுதிக்கும்
வய்யா புரியோன்முரு
கய்யா உளமுத்தய்யா [௧]

170616
Q2 6;38.2195 NM

பல்லவி பாரினிலே புகழ் என்ற மெட்டு

மாமயிலேறிமுன் னேவரும் வேலவரே—கோறு
வதைத்தரு வீரே.

அநுபல்லவி.

தாமதம் செய்யாதுன் தாளைத்துதித்திடத்
தள்ளாது என்பிணி யில்லாதறுத்திட [மா]

சரணங்கள்.

சித்துவிளை யாடுதற்கு உன்னருளால் வேடர்குலச்
சேயன் காவி
வஸ்திரமே கட்டிவெளி யேரிவெள்ளிமலையினடி
வாரம் வந்து
பக்தியுள சின்னாண்டி சுவாமியவருனது யிரு
பாதம் போற்றி
நித்தியமும் வருபவர்கள் கோருவதைக் கருணையொடு
அவரவர்கட்கு வரமும் நித்தியமே
கொடுத்தாவது சத்தியமே
தவமுள அய்யாச் சாமிதமிழ்கன்பாய்
தாண்டவ மாடிடும் ஆண்டவன் பாலனே (மா)

பல்லவி அதிகசுரதநய என்ன மெட்டு.

கனகமயிலதனை உனதுவாகனமெனக் கண்டேன்-மடத்திலுள்ள

அநுபல்லவி.

அனல்பொரி யெனவந்த சரஹணபவனே
அமரர்பரவிய நின்திருவடி யதனை
வனமதனி பவனின் மருகனே குகனே
வளம்பொருந்திய வெள்ளிமலைவளர் பவனே (க)

சரணங்கள்.

நாகம் அணிந்தவரின் மாது—உமைக்கெப்போதும்
தாகம் புனுகுடனஜவ் வாது—எப்போதும் பூசும்
தேகம் நிகர்சொலவொண் ணாது—உள்ளவள்வலப்
பாகம் அமைந்த சிவன் மீது—கணையவிட்ட

மன்மத னன்னழ கின்னிக ரேதேனும் கோனே
உனக்குமுனம்
விண்ணுல கின்னர சன்மகள் பாரியாய்த் தானே
அமைந்து உள்ள
சண்முக முன்பெயர் ரென்பதும் நான்சொல்லுவேனே
உனை யல்லாது
வல்லவர்கள் தொல்லுலகி லில்லையெனச் சொல்லிவிட லாமே
கதிரோன் திங்கள்
உள்ளவரை பிள்ளையெனத் தள்ளிடாதே தொல்லை தீரத்தாமே
துதிக்கும் எமக்
கெள்ளளவும் கள்ளமிலா துள்ளமொடு நல்லவ ராமே
யிந்தப்

பாரினிலரக்கரை மாய்த்திடும் வேதா
பக்தனுயிருப்பவரிடம் வரும் பாதா
நாரிய ரிருவரைக் கலந்திடும் நாதா
நம்பினே னுனதருள் தந்திடு நீதா [உ]

மங்கை யுனக்கெப்போதும் ரெண்டு பக்கமிருக்க
செங்கை வடிவேலனைக் கண்டு அடிபணிந்து
கங்கை மகனுக்குத் தொண்டு செயவே எண்ணி
என்கை யிரண்டும்கூப்பி நின்று ஆராருகையா

வந்திடு கந்தனே யென்றுனைக் கெஞ்சினேன் வேலா
பண்டிதஞ் செய்யும்.
உந்தனைச் சிந்தையில் வந்தனை செய்கிறேன் - சீலா
பிணியகலத்

தந்திட வுந்துணை எந்தையே செய்யனு - கூலா
மறவா தெந்தன்
இச்சைபடிப் பட்சம்வைத்து ரட்சித்திடு யிச்சணமென்றேனே
நானிலந்தனில்
துற்சனரை கெற்சனைசெய் தச்சமுறச்சிட்சைசெய்கு வோனே
பார்வதி தேவி
நற்சுதனே நிச்சயமாய் சொற்சுவைக்கி மெச்சிப்பணி வேனே
என்னைப்
பார்புது வைப்பதி வாழ்ந்திடும் தாசன்
பன்பொடு செந்தமிழால் சொலும் நேசன்
பேர்அய்யாச் சாமியின் அன்புள்ள யீசன்
பிரபலக் குமரனாய் ஆனவுள் ளாசன் [க]

கட்டளைக் கலித்துறை.

பத்தித் தொழுது உனையே விடாமற் பாடுமெமக்
கஸ்திப் பிணியின் வகைகள் முழுது மகலச்செய்யும்
சித்திக் கணபதிக் கும்இளைய சேவலாசீ
தத்தித் ததும்பி னும் விடேனுனைச் சத்தியமே

பல்லவி இராகம் மோகனம் தாளம் ஆதி.

நாதனே வந்தேதா குகனே எனக்குச் சுகம் [நா]

அநுபல்லவி.

பாதக மகலச்செய்யும் மாதவா நின்னிடம் கெஞ்சி
பக்தியொடு நித்தமும்நி னைத்திடவ ருள்தரவென் [நா]

சரணங்கள்

நித்திய மரவா தெந்தன் அத்திமுகனுக்கிளைய
சத்திவடி வேல்கு மாரன் உலகனைத்தும்
சுத்திவருவா ருதாரன் செந்திநக
ரத்திலேபெரு நோயினாலேயவர்
உத்தி யேரியே வீழ்ந்திடும் போதினில்
சுத்தமே நினை யாதங்கே போயவ
ருற்றருணைகிரி யார்தனைக் கார்த்தயென் [நா]

தச்சனுக்குப் பயந்தோ நச்சரவ ஆபரணம்
அச்சமிலா தணி யீசன் மகிழ்ந்துபெற்ற
பச்சமுள்ள முரு கேசன் தேவருக்காக
விட்டிடேனென வேவருமசுரர்கள்
மட்டிலா தபே ரேயுனைமிரட்டிட
எட்டியேயிருந் தோர்களை தனைவிட
பட்டயாவர்கள் மாய்ந்திடச்செய்தபூ [நா]

எப்பதியும்நிகரிலாக் கற்பகச்சோலையாயுள்ள
அப்புதுவை அய்யாச் சாமி சொல்தமிழில்
தப்பிதமிலாது நேமி யெனப்பஜனை
பாடியேசொல வேவெள்ளிமலைதனில்
கூடியே யெந்த நாளுமுனைத்தொழ
தேடியேவரு வோர்களைக் கார்த்திட
ஓடியேவரு மாயவன்மருகனே [நா]

பல்லவி. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

வெள்ளி மலையில்வளர் வேலவனேநீவா—நான்
வேண்டித் துதித்திடுகு வேனே சண்முகா

அநுபல்லவி.

மெல்லி யிருவர்கள் வள்ளிதெய் வானையும்
புள்ளி மயிலொடு பூமியி லேயுயர் [வெ]

நழுவிய பூசையிலா நற்கீரர் குகையிருந்தே
எழுதிய பாடல்களுக் கேயிரங்கிக் காப்பாற்றிய []
பாக்களி னுலேவைது பாடும் கவிராஜருக்கும்
கார்க்கவே யெண்ணங் கொளும் கந்தா குகாகடம்பா (வெ)
சந்ததம் புதுவைஐயாச் சாமிசொன்ன கீர்த்தனத்தை
உந்தன்செவிக் கின்பமா யோதுமெனைப் பாதுகாக்க []

ஆசிரிய விருத்தம்.

அங்கார மானகுர வள்ளிதெய் வானையின்
அன்பிற் கிசைந்த தோளா
அய்யனே பனிரெண்டு கய்யனே உலகாள
ஆறுமுக மான வரதா
ரிங்கார மாய்வண்டு பாடுதற் காகவே
நிறைந்திடு புஷ்ப வனமாய்
நின்னிருப் பிடமான வெள்ளியங் கிரியினில்
நிகழ்ந்திடும் சுப்ர மண்யா
சங்கார காலமென அரிபிரமர் பயமுறத்
தகிலமுழு தும் நடுங்கச்
சண்டமா ருதமெனக் கண்டவர் திடுக்கிடத்
தானடன மாடு மயிலில்
சிங்கார மாய்வந்து யென்னோய் தொலைத்திடு
தினந்தவ ராது *போற்றும்
சேயனு னுனதடிமை யாகினேன் கருணைசெய்
செந்திநகர் கந்த வேளே,

கண்ணிகள். காணவேணும் காணவேணும் என்ற மெட்டு

அள்ளியள்ளி யேகொடுக்க வெள்ளி - மலை
ஆண்டிவினை யாண்டிடவே வள்ளி - தெய்வ
யானையொடு மேவுமுரு கோனையனு தினம்துணை
யாக—பவம்—போக

மறவாதுனையே ஒருக்காலும் - உயர்
வானபு துவைநகர் வாழும் - குண
மைந்தராக ளாகியநாங்கள் சிந்தையி லுனைத்தொழுவோ,
மாக—உயர்—வர்க

நித்தநித்த நற்பஜனை பாடி - நாங்கள்
நின்றுபணி கின்றவிடம் நாடி - வரும்
நேரமிதுவே சமயம் தூரமல்ல ஆதலினால்
நீயே—வருவாயே

கானகத்திற் காந்தர்வ விவாகம் - செய்த
...முடை ...னாஉன் தாஷ்டீகம் தாரு
காசுரனைச் ஜெயித்துச் ...பாசெனு ம்ரக்கர்குல
காலா—சிவன் பாலா

பச்சைநிறத் தோகைதனில் தானே - யிரு
பாரியொடு யேறிவரு வோனே மிகப்
பக்தனய்யாச் சாமிதமிழ் கெத்தருனமுங் தயவாய்
பாரும்—கழி—கூறும்

திருப்புகழ் சந்தம்.

தேடியெடுத்து சிதைந்திடாமலே
கூடியிசைத்துத் திரட்டியேயிதைப்
பாடியமைத்து பொருந்திய நவ ரசமாமே

நானுனை மெச்சிப் பணிந்துதானித
மேயுனைப் பற்றிப் புகழ்ந்து பேசிடும்
சேயனை விட்டுப் பிரிந்திடாதிரு வடிவேலா

கோவில்லா வாக்கைக் கொடுக்கவேமுரு
காயிருபதந்தைப் பிடித்துக் கொண்டதால்
வாயினி உன்னைத் துதித்துப் பாடிட மாரவேனே

பூமியைச் சுற்றித் திரிந்துதான்வர
வேமிகப்பச்சைத் தோகைதானய்யா
சாமிகளைத்தப் போதிலேவரு மயிலோனே

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களஞ் ஜெயமங்களம்

அநுபல்லவி.

ஐங்கரனுக் கிளைய ஆறுமுகனுக்கும் ஜெய [ம]

சரணங்கள்.

பரமசிவன் தனக்கும் பட்சமுள்ள விஷ்ணுவுக்கும்
பிரமனொடு கதிரோன் பின்பற்றிய திங்களுக்கும் [ம]

இளையவள் வள்ளிதெய்வ யானையு மையாரவர்க்கும்
கலைமகளொடு அந்தக் கனம் லட்சுமிக்கும ஜெய [ம]

தேவேந்திரர்க்குமன்று தேசம்சுற்றும் நாரதர்க்கும்
பாவாணர் கட்டுமிங்கு பஜனைசெய்வோர் களுக்கும் [ம].

நவரசக் கீர்த்தனைக்கும் நாவாலியற்றினோர்க்கும்
பவத்தொலையப் படிக்கும் பார்அச்சுக்கோர்த்த வர்க்கும்[ம]

வெள்ளி மலையாண்டி
நவரசக் கீர்த்தனை
முற்றிற்று.

A 26'38-211844